**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**CC.NO. 43/2020 LW- 10 PW-9**

| | |
|---|---|
| Name | சுப்புலட்சுமி |
| Husband/Father Name | ஜெகன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | பாதுகாப்பு காவல் பிரிவு ஆய்வாளர், சென்னை |
| Age | 47 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 11.08.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி 1 ஆஜர். எதிரி 2 , 4 ஆஜரில் இல்லை. 2, 4 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3ம் எதிரி இறந்துவிட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் பாதுகாப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக இருந்து வருகிறேன். நான் இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 19.08.2019 அன்று நிலைய பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் புவனேஸ்வரி த/பெ லோகநாதன் அவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனு ரசீது எண் 391/2020 என்பதை பதிவு செய்தேன். வழக்கின் இரு தரப்பினரையும் அழைத்து விசாரித்த போது இருவரும் சமாதனமாக சேர்ந்து வாழ்வதாக கூறியதால் முதல் விசாரணை முடிக்கப்பட்டது. 27.02.2020 ம் தேதி 18.00 மணிக்கு மனுதாரர் புவனேஸ்வரி நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று குற்ற எண் 4/2020 இ.த.ச பிரிவுகள் 294(பி), 498ஏ, 406, 323, 506(1), மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், பிரிவு

4 வரதட்சனை தடுப்பு சட்டம் ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

அன்றைய தினமே சம்பவ இடமான எதிரி ஜெய்கணேஷ் என்பவரின் வீட்டிற்கு சென்று 18.30 மணிக்கு சாட்சிகள் தினகரன், ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன் அவைகள் முறையே **அ.சா.ஆ.6** மற்றும் **7** ஆகும். பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே புகார்தாரர் புவனேஸ்வரி, சாட்சிகள் லோகநாதன், மகேஷ்வரி ஆகயோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் எனக்கு கிடைத்த ரகிசிய தகவலின் படி எதிரியை தேடி சென்றதில் அன்றைய தினம் 20.30 மணிக்கு முத்துகடை பேருந்து நிறுத்ததிடம் நின்று கொண்டிருந்த எதிரி ஜெய்கணேஷ் என்பவரை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பெருமாள் மற்றும் சாந்தி முன்னிலையில் 21.00 மணியளவில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரை நிலையம் கொண்டு வந்து உரிய பாரா உடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

அதன் பிறகு எதிரியின் பக்கத்து வீட்டுக்கரார்களான கருணாகரன் மற்றும் திவாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் 2,3,4 ம் எதிரிகள் மாண்புமிகு வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள காரணத்தால் அவர்களை நான் கைது செய்யவில்லை. இத்துடன் என் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 498ஏ, 406, 323, 506(1), மற்றும் பிரிவு 4 பெண்கள் வண்கொடுமை தடுப்புச் சட்டம், பிரிவு 4 வரதட்சனை தடுப்பு சட்டம் ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

நீங்கள் எந்த காலகட்டத்தில் இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தீர்கள் என்றால் 2018–2020 வரை இருந்தேன். வழக்கில் நீங்கள் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தீர்கள் என்றால் ஆமாம். அ.சா.ஆ.1 புகாரில் எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். இவ்வழக்கில் சமுதாய பணி பதிவேடு 391/2019 ல் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று முடித்து வைத்துள்ளீர்கள் நீங்கள் முடித்து வைத்த அந்த ஆவணம் தான் எ.த.சா.ஆ. 1 (தகவல் உரிமை சட்டத்தின்) கீழ் பெறப்பட்ட ஆவணமாகும். முதல் தகவல் அறிக்கையில் 28.01.2020 அன்று ஒரு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

முதல் தகவல் அறிக்கையில் 3 ம் பத்தியில் சம்பவ தேதி 06.03.2017 என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் திருமண தேதி அன்றே கொடுமைகள் தொடங்கியதால் அந்த தேதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. புகார் சம்மந்தமாக உங்கள் காவல் நிலையத்தில் தகவல் பெறப்பட்ட தேதி 27.02.2020 என்று முதல் தகவல் அறிக்கையில் பத்தி 3 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 28.01.2020 ல் நடைபெற்ற சம்பவத்திற்கு புவனேஷ்வரி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையில் காலதாமதத்திற்கு அ.சா.1 விளக்கம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

அ.சா.1 புவனேஷ்வரி உங்களிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் காலதாமதம் குறித்து விளக்கம் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். இவ்வழக்கில் சமுதாய பணி பதிவேடு 391/2019 ல் இருதரப்பினரும் ஆஜராகி சமரசமாக சென்றார்கள் என்று வழக்கை முடித்து வைத்துள்ளீர்கள் இது சம்மந்தமாக இரு தரப்பினருக்கும் நீங்கள் அறிவிப்பு எதுவும் அனுப்பினீர்களா

என்பதை பற்றி உங்கள் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் உங்களுக்கு எதிராக இறந்துபோன எதிரி பழனியும், 2ம் எதிரி உஷாவும் தாக்கல் செய்த மாநில மனித உரிமைகள் ஆணைய வழக்கு எண் 1026/2020 ல் மாண்புமிகு மாநில மனித உரிமைகள் ஆணையத்தால் 07.10.2022 அன்று வழங்கப்பட்ட உத்திரவு தான் இந்த ஆவணம் என்றால் ஆமாம் அது **எ.த.சா.ஆ.2** ஆகும். மனித உரிமைகள் ஆணையத்தில் மேற்சொன்ன மனித உரிமைகள் ஆணையத்தில் கொடுக்கப்பட்ட புகார் தான் தற்போது காட்டபடும் ஆவணம் என்றால் ஆமாம் அந்த ஆவணம் **எ.த.சா.ஆ.3** ஆகும்.

28.01.2020 அன்று இறந்துபோன பழனியையும் எதிரி உஷாவையும் நீங்கள் காவலர் மூலமாக அழைத்து அவர்களை தாக்கியுள்ளதாக மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி அது வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றும் மாநில மனித உரிமைகள் ஆணைய வழக்கு சம்மந்தப்பட்ட சங்கதி என்றும் பதிவு செய்கிறார். மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் இறந்த போன எதிரி பழனி மற்றும் 2 ம் எதிரி உஷா கொடுத்த புகாருக்கு ஒரு மாதம் கழித்து தான் இந்த வழக்கில் நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் எதிரிகள் தாக்கல் செய்த விவரம் எனக்கு 2021 ல் சம்மன் மூலமாக தான் தெரியவந்தது. அந்த மாநில மனித உரிமைகள் ஆணைய வழக்கில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை உங்கள் தரப்பு வழக்கு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம்.

மாநில மனித உரிமைகள் ஆணைய உத்திரவில் நீங்கள் சட்டத்திற்கு புறம்பாக 2 மற்றும் 3 எதிரிகளுக்கு எதிராக மாநில மனித உரிமைகளை மீறியுள்ளீர்கள் என்று உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த உத்திரவுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்துள்ளேன். அ.சா.6 சாந்தி அ.சா.1 புவனேஷ்வரிக்கு பெரியம்மா முறை என்றால் ஆமாம். சாட்சிகள் கருணாகரன் மற்றும் திவாகரன் அ.சா.2 லோகநாதனுக்கு நண்பர்கள் என்றால் இருக்கலாம் அந்த விவரம் எனக்கு தெரியாது.இறுதி அறிக்கையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சி பட்டியலில் கருணாகரன் மற்றும் திவாரகன் முறையே நெமிலி தாலுக்காவில் நேரு நகர் காரையில் வசித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

சாட்சிகள் கருணாகரன் மற்றும் திவாகரன் ஆகியோர்கள் எதிரி வீட்டின் அருகே வசித்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் ஆனால் அ.சா.ஆ.6 ல் வரைபடத்தில் அவர்களின் வீடுகள் சுட்டி காட்டவில்லை என்றால் ஆமாம். நீங்கள் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தவாறு கருணாகரன் மற்றும் திவாகரன் என்பவர்கள் எதிரிகள் வீட்டிற்கு அருகே வசிப்பவர்கள் கிடையாது அ.சா.2 லோகநாதன் என்பவரின் நண்பர்கள் அவர்களை நீங்கள் சாட்சி பட்டியலில் தவறாக சேர்த்துள்ளீர்கள் என்றால் நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது அருகே இருந்தவர்கள் எதிரிகளுக்கு பயந்து சாட்சியம் அளிக்க முன்வரதா காரணத்தால் கருணாகரன் மற்றும் திவாகரை நான் சாட்சி பட்டியலில் சேர்த்தேன்.

இறுதி அறிக்கையில் மேற்சொன்னது போல எதிரிகளுக்கு பயந்து சம்பவ இடம் அருகே உள்ள நபர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்று நீங்கள் பதிவு செய்யவில்லை என்றால் அது தேவையில்லை என்பதால் பதிவு செய்யவில்லை. புகாரில் அ.சா.1 ன் அம்மா 5 1/2 சவரண் தான் போட முடியும் என்று 2 ம் எதிரியிடம் கூறியுள்ளார் அதை 2 ம் எதிரி ஏற்றுக்கொண்டு பெண் கொடுத்தால் போதும் என்று ஒத்துக்கொண்டு தான்

திருமணம் நடைபெற்றுள்ளது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதே சமயம் ரூ.80,000 பணம் வண்டிக்காவும், ரூ.2,00,000 திருமண செலுவுக்காகவும், 1 கிலோ வெள்ளி பொருட்களும் கொடுக்கப்பட்டதாக புகாரிலேயே காணப்படுகிறது. உங்கள் விசாரணையில் அ.சா.1 திருமணத்திற்கு கொடுக்கப்பட்ட நகைகள் பட்டியலை சரிபார்தீர்களா என்றால் அவ்வாறு நகைகளை என்னிடம் தரவில்லை.

அ.சா.1 திருமணத்திற்கு பிறகு எங்கு வசித்து வந்தார் என்றால் 1 ம் எதிரி வீட்டில் தான் வசித்து வந்தார். நீங்கள் சொல்வது தவறு அ.சா.1 ம் 1 ம் எதிரியும் ஆற்காட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சரிவர விசாரணை மேற்கொள்ளாத காரணத்தால் தான் அவர்கள் ஆற்காட்டில் வசித்து வந்த விவரம் உங்களுக்கு தெரியவில்லை என்றால் அது தவறு. புகார் மற்றும் விசாரணையில் அ.சா.1 அவர் கணவரிடம் இருந்து எந்த தேதியல் பிரிந்து சென்றார் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 புகார் மற்றும் 1-3 கொடுத்த வாக்குமூலங்களில் 2 ம் எதிரி எந்த தேதிகளில் ரூ.5,00,000 மற்றும் 20 சவரண் நகையும் கேட்டார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை தொடர்சியாக கேட்டதாக சொன்னார்கள். வாக்குமூலத்தில் அவ்வாறு தொடர்சியாக கேட்டதாக சொல்லவில்லை என்றால் அது தவறு.

2017-2019 காலகட்டத்தில் அ.சா.1 எதிரிகள் மீது புகார் எதுவும் கொடுக்வில்லை என்றால் ஆமாம். 27.02.2020 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக கு.வி.மு.ச பிரிவு 41(எ) வில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை நீங்கள் கடைபிடித்தீர்களா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் அவ்வாறான முறையை பின்பற்ற வேண்டும் என்று சாட்சி பதிவு செய்கிறார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக குடும்ப நல வழக்குகளில் கு.வி.மு.ச பிரிவு 41(எ) வில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை நீங்கள் கடைபிடித்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

இந்த வழக்கை பொறுத்த வரை கு.வி.மு.ச பிரிவு 41(எ) வின் அடிப்படையில் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் இல்லை.

இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கணிணியால் தட்டச்சு செய்யப்பட்டு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.சா.1 உங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவர் கணவர் வீட்டார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் நகைகள் போடப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். தாலி பிரிக்கும் வைபவத்திற்காக தான் அ.சா.1 யை 1 ம் எதிரி அ.சா.1 வீட்டில் விட்டு சென்றார் என்று அவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 செவிலியர் பட்டதாரி என்றால் இல்லை அவர் படித்து கொண்டிருந்தார். அ.சா.1 ன் புகாரில் உள்ள கையொப்பத்திற்கும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள அ.சா.1 கையொப்த்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் இல்லை கையொப்பத்தை என் முன்னிலையில் தான் செய்து கொடுத்தார்.

முதல் தகவல் அறிக்கையில் 28.01.2020 அன்று ஆய்வாளர் எதிரிகளை விசாரித்தாக பதிவு செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்த தேதியில் அ.சா.1 யிடம் இருந்து எழுத்து பூர்வமான புகார் எதுவும் பெற்றிருந்தீர்களா என்றால் இல்லை. அவர் கொடுக்கவில்லை. உங்கள் காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு பயன்பாட்டில் உள்ளது என்றால் ஆமாம். புகார் யார் கொடுத்தாலும் அதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்பது சட்ட விதி என்றால் ஆமாம். 28.01.2020 அன்று பொது நாட்குறிப்பில் அ.சா.1 புகார் கொடுத்தது போன்று பதிவு எதுவும் செய்யப்பட்டதா என்றால் இல்லை காரணம் அந்த தேதியல் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

28.01.2020 அன்று எதிரிகள் 2-3 காவலர் மூலமாக காவல் நிலையத்திற்கு அழைத்து அவர்களை அடித்துள்ளீர்கள் அவர்களிடம் ரூ.5,00,00 பணம் கேட்டுள்ளீர்கள் என்றால் இல்லை அது தவறு அன்று நடந்த

சம்பவமே வேறு, எதிரிகளுக்கும் வாதி குடும்பத்தினருக்கும் சண்டை நடந்தது அப்போது எதிரிகள் வாதியை அடித்தார்கள் அப்போது நான் சண்டையை விலக்கி விட்டேன். அப்போது என் மீதே புகார் கொடுப்பேன் என்று எதிரி தரப்பினர்கள் கூறினார்கள். மேற்சொன்ன விவரத்தை முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது போல் சம்பவம் நடைபெற்று இருந்தால் அன்றைய தினமே எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்திருப்பீர்கள் எனவே நீங்கள் சொல்வது போல் சம்வம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எழுதி கொடுத்தார்கள் ஆனால் வழக்கில் ஆவணமாக முன்னிலைபடுத்தவில்லை. அவ்வாறு எதிரிகள் எதுவும் உங்களிடம் ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை வழக்கிற்காக வேண்டி நீங்களே ஆவணத்தை எழுதி பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சாட்சிகள் 1–9 நபர்களிடம் நீங்கள் பெற்ற வாக்குமூலம் எந்த தேதியல் பதிவு செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். அந்த வாக்குமூலங்கள் எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற விவரமும் இல்லை என்றால் ஆமாம். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையும் எதிரியை கைது செய்த பிறகு தான் நீதிமன்றத்திற்கு பிறகு அனுப்பி வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சாட்சிகளின் வாக்மூலங்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திய சமயத்திலேயே நான் வாக்குமூலங்களை அனுப்பியுள்ளேன்.

நீங்களே சாட்சிகளின் வாக்குமூலங்களை தயார் செய்து கொண்ட காரணத்தால் தான் அதில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 தன் சாட்சியத்தில் தன் மகளை எந்த தேதியில் இருந்து 2, 3 ம் எதிரி கொடுமைபடுத்தினார்கள் என்று தேதி குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.3 சாட்சியத்தை எங்கு வைத்து பதிவு

செய்தீர்ள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து தான் பதிவு செய்தேன்.நீங்கள் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து பதிவு செய்திருந்தால் கையால் தான் பதிவு செய்திருப்பீர்கள் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அ.சா.6 சாந்தியின் ஊர் புளியங்கண்ணு இல்லை ஐயம்பேட்டை என்றால் சரிதான்.

அ.சா.6 தன் வாக்குமூலத்தில் 27.02.2020 அன்று அவரும் சாட்சி பெருமாளும் என்ன பதிவெண் கொண்ட வாகனத்தில் புளியங்கண்ணுவிற்கு வந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் அது வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்பதால் பதிவு செய்யவில்லை. அவ்வாறு அவர்கள் இருசக்கர வாகனத்தில் வரவே இல்லை எனவே தான் அவர்கள் இருசக்கர வாகனத்தில் வந்த காரணத்தையும் இரு சக்கர வாகன பதிவெண்ணையும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியை முத்துகடையில் வைத்து கைது செய்த போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. பொதுமக்களும் இருந்தார்களா என்றால் ஆமாம். பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் யாரும் முன்வராத காரணத்தால் விசாரிக்கவில்லை. நீங்கள் சொல்வது தவறு அவ்வாறு நீங்கள் முத்துகடை பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது நடவடிக்கை மேற்கொள்வில்லை வழக்கு ஆவணம் அனைத்தும் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 ன் சித்தப்பா அ.சா.4 தினகரன் என்றால் ஆமாம், தூரத்து உறவினர் ஆவார். வழக்கு சாட்சி பட்டியல் படி கருணாகரனும், திவாகரனும் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்றால் ஆமாம். கருணாகரன் மற்றும் திவாகரன் அவர்கள் வாக்குமூலத்தில் சம்பவம் குறித்து எவ்வாறு அவர்களுக்கு தெரியவந்தது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் 28.01.2020 அன்று எதிரிகள் அ.சா.1

யை அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது அதற்கான காயச்சான்று எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சீட்ட உள்ளது ஆனால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு எந்த ஆவணமும் கிடையாது வழக்கிற்காக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் தினகரன் மற்றும் ராஜசேகரை சம்பவ இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லியுள்ளீர்கள் ஆனால் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது எனவே காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் தயார் செய்ப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த காலத்திலும் எந்த சூழ்நிலையிலும் அ.சா.1 யை வரதட்சனை கேட்டு கொடுமை படுத்தவில்லை சாப்பாடு போடாமல் துன்புறுத்தவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 1 ம் எதிரியுடன் 2 மாதம் தான் சேர்ந்து வாழ்ந்தார் அ.சா.1 அவராக தான் 1 ம் எதிரியை விட்டு விலகி சென்றார் என்றால் அ.சா.1 யை எதிரி 1 உடன் வாழ விடவில்லை வரதட்சனை கொடுத்தால் தான் வாழ முடியும் என்று கூறிவிட்டார்கள். நீங்கள் சொல்வது போல் சம்பவம் நடைபெற்று இருந்தால் 2017-2019 காலத்தில் புகார் கொடுக்கப்பட்டிருக்கும் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எதிரிகள் எந்த காலத்திலும் எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.